# யாழ்குடாவை புத்தர் பூமியாக்க முடிவு

யாழ்குடாவை புத்தர் பூமியாக மாற்றும் நடவடிக்கையில் பௌத்த பிக்குகள் தீவிரமாக இறக்கிவிடப்பட்டுள்ளனர். இதற்கு சிறிலங்காப் படையினர் தமது முழுமையான உதவிகளை வழங்கி வருகின்றனர். நைனாதீவை முழுமையாக சிங்கள மயப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ள அவர்கள், தீவகத்தில் ஏனைய பகுதிகளிலும் புதிய புத்தர்சிலை நாட்டுவதற்குரிய பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். யாழ்ப்பாணத்தின் தீவகத்தின் முதன்மை வீதியில் 1996ஆம் அண்டு நிலைகொண்டுள்ள சிறிலங்காப்படையினர் அரசமரத்தினை நாட்டியுள்ளார்கள். தற்போது சிறிய அரசமரமாக வளர்ந்துள்ள நிலையில் அதனைச்சுற்றி மேடை ஒன்றினை அமைக்கும் பணியில் சிறிலங்காப் படையினர் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தீவகத்திற்கு செல்லும் வழியின் பண்ணைப் பாலத்தினை அடுத்த பகுதியில் சிறிலங்காப் படையினரின் காவலரணுக்கருகில் அமைந்துள்ள இந்த அரசமரத்தினை வழிபாட்டுத்தலமாக மாற்றுமாறு நைனாதீவிற்கு செல்லும் சிங்கள மக்கள் சிறிலங்காப் படையினரிடம் தெரிவித்துள்ளதை தொடர்ந்து இந்த அரசமரத்தடியில் புத்தர் சிலையினை நிறுவுவதற்கான பணிகளில் சிறிலங்காப் படையினர் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, கடந்த 1990 ஆண்டுக்குப் பின்னர் யாழ் குடாநாட்டுக்குச் சென்றுவர முடியாமலிருந்த சிங்களவர்கள் இப்போது கணிசமான அளவில் அங்கு சென்றுவருவதோடு, அங்கு வர்த்தகத்தை மேற்கொண்டு கொள்ளை இலாபமும் சம்பாதித்து வருகின்றனர். அத்துடன், பெருமெடுப்பில் சிங்கள சுற்றுலாப் பயணிகளும் வருகின்றனர். அங்கு போதிய வசதிகள் மற்றும் உட்கட்டுமானங்கள் இல்லாத காரணத்தால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதாக கூறப்படுகின்றது.

சிங்கள வணிகர்கள் யாழ்ப்பாணத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதால், யாழ் வணிகர்கள் பாடு பெரும் மோசமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 'யாழ்ப்பாணத்தில் வியாபாரம் நன்றாக நடக்கிறது', 'யாழ் மக்கள் மிகவும் நல்லவர்கள்', 'இங்கு நாங்கள் ஒரு சில நாட்கள் மட்டுமே வியாபாரம் செய்தோம் ஆனால் பெருமளவு இலாபம் கிடைத்துள்ளது' என்றெல்லாம் சிங்கள வணிகர்கள் பத்திரிகைகளுக்குக் கூறியுள்ளனர். சுற்றுலாப்பயணிகள் எதிர்பார்க்கும் தங்குமிட வசதிகள் யாழ்ப்பாணத்தில் இல்லை எனினும் தினமும் 20 பேருந்துகளில் தென்னிலங்கைச் சிங்களவர்கள் வருவதாகவும் அவர்கள் துரையப்பா அரங்கத்தில் தூங்கி எழுவதாகவும், தமது உணவுகளையும் அவர்கள் அங்கேயே சமைக்கிறார்கள். தண்ணீர் மட்டும் யாழ் மாநகரசபையால் பற்றாக்குறை இல்லாமல் விநியோகிக்கப்படுகிறது. அத்துடன், அச்சுவேலிப் பகுதியிலுள்ள வயற்காணிகளை இம்மக்கள் தமது கழிப்பறைகளாகப் பயன்படுத்தி வருவதால் அங்குள்ள விவசாயிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, யாழ் இந்துக் கல்லூரிக்கு சிங்களப் பாடத்துக்கு ஆசிரியராக பௌத்த பிக்கு ஒருவர் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது கடமையை கடந்த வாரம் பொறுப்பேற்றுக் கொண்டார் என யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வி.கனேசராசா தெரிவித்துள்ளார். குருநாகல் தேசிய பாடசாலையான மிசங்க மகா வித்தியாலயத்தில் சிங்களப் பாடம் கற்பித்த பௌத்த பிக்குவே யாழ்.இந்துக் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். குறித்த பிக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் சிங்களப் பாடம் கற்பிப்பதற்கு தமக்கு இட மாற்றும் தர வேண்டும் என கல்வி அமைச்சிடம் கேட்டுள்ளார். இந்நிலையிலேயே கல்வி அமைச்சு மேற்படி நியமனத்தை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி பௌத்த பிக்கு சிறிலங்கா இராணுவத்தின் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்தவர் என பாடசாலை வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தள்ளன. இவர் சிறீலங்கா இராணுவத்துடன் நெருக்கமானவர் என்பதும் வெளிப்படையான ஒரு விடயமாக காணப்படுகின்றது என மேலும் தெரிவிக்கின்றன. அத்துடன், யாழில் சிங்களவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் அங்கு சிங்களம் கட்டாய பாடமாக மாற்றப்பட்டாலும் ஆச்சரியப்படத் தக்கதல்ல என அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

## "மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்"

## புத்தரை வணங்க அனுமதி மறுப்பு இந்துக் கடவுளிடம் வேண்டுதல்

தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்ன காலம் போய் இப்போது சிங்கள மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று சொல்கின்ற காலம் எழுந்துள்ளது. அதுவும் சிங்கள மக்களைக் காப்பாற்றுவதற்காக தமிழ் மக்களை அழித்தொழித்த சிறிலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதியின் மனைவி அனோமா பொன்சேகாதான் இந்த வாக்கை உதிர்த்திருக்கின்றார்.

ஜனநாயக விழுமியங்கள் உணர்வற்று செயலிழந்து போயுள்ளன. ஒரு குடும்பத்தின் சர்வாதிகார ஆட்சி முழு நாட்டையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. எனவே, இந்த நாட்டையும் மக்களையும் சிறைவாசம் அனுபவிக்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவையும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று அனோமா பொன்சேகா தெரிவித்தார்.

நீதி கிடைக்க வேண்டுமாயின் கடவுளிடம் மன்றாடுவதைத் தவிர வேறு வழியில்லை. எனவே, பொது மக்கள் அனைவரும் தத்தமது மத வழிபாடுகளில் ஈடுபடுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். ஜெனரல் சரத் பொன்சேகா விரைவாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று ஜே.வி.பி. மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி உறுப்பினர்கள் உட்பட அனோமா பொன்சேகா ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு முகத்துவாரத்தில் உள்ள இந்துக்களின் காளி கோயிலில் தேங்காய் உடைத்து வழிபாடுகளில் ஈடுபட்டனர். இதன் பின்னர் உரையாற்றும் போதே அனோமா பொன்சேகா மேற்கண்டவாறு கூறினார்.

(38ம் பக்கம் பார்க்க)




### லசந்தவுக்கு 'நாயகன்' விருது

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் மறைந்த லசந்த விக்ரமதுங்கவுக்கு சர்வதேச பத்திரிகை அமைப்பு, `உலக பத்திரிகை சுதந்திரத்தின் நாயகன்` விருது வழங்கி கௌரவித்துள்ளது. இந்த அறிவிப்பு கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டது. இதேவேளை, லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் ஐந்து தொலைத் தொடர்புக் கோபுரத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட அழைப்புகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு கல்கிசை பிரதான நீதவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மீண்டும் கொழும்பில் கண்டெடுக்கப்படும் சடலங்கள்

மீண்டும் கொழும்பில் அநாதரவான சடலங்கள் கண்டெடுக்கப்படத் தொடங்கியுள்ளன. கொழும்பு ஜெயவர்த்தனபுரவுக்கருகில் உள்ள ஏரியில் கடந்த (24) புதன்கிழமை சடலம் ஒன்று அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. அதியுயர் பாதுகாப்பு வலயகமான நாடாளுமன்றக் கட்டிடதிலுள்ள சபாநாயகரின் வீட்டுக்குப் பின்புறமாக உள்ள நீரேரியிலேயே இச்சடலம் மீட்கப்பட்டுள்ளது. மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவம் தொடர்பில் குறிப்பாக ஊடகத்துறையினர் பல சந்தேகங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஜனவரி 25ம் திகதிக்கு முன்னர் அதாவது ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் மகிந்தவை மிகக் கடுமையாக விமர்சித்த லங்கா ஈ செய்தி இணையத்தளத்தின் பத்திரிகை ஆசிரியரும் சிறந்த கேலிச்சித்திர வடிவமைப்பாளருமான பிரகீத் எக்நேலியகொட காணாமல்ப் போன சம்பவம் தொடர்பில் இதுவரை எந்த ஒரு பதிலும் ஹோமாகம காவற்துறையினருக்குக் கிடைக்காத நிலையில் அவரது குடும்பத்தினர் மிகக் கலக்கம் அடைந்துள்ளனர். காவற்துறை ஊடகப்பேச்சாளர் பிரசாத் ஜயகொடியும் குறித்த ஊடகவியலாளரது விசாரணை தொடர்பில் இதுவரையிலும் எந்தவொரு கருத்தையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதேபோன்றே 2005 ஏப்ரல் மாதம் 28ம் திகதி பிரபல ஊடகவியலாளர் சிவராம் பம்பலப்பிட்டி காவல் நிலையம் முன்பாக வைத்துக் கடத்தப்பட்டு நாடாளுமன்றக் கட்டடத்திற்கு பின்புறமாக சடலமாக மீட்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### அவசரகாலச் சட்டத்தை நீடிக்க புதிய அச்சம்

கொழும்பிற்குள் விடுதலைப் புலிகளின் தற்கொலை போராளிகள் ஊடுருவி இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் வெளியாகியுள்ளதாக சிறிலங்காவின் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க ஊடகவியலாளர் சந்திப்பின் போது அச்சம் வெளியிட்டார். இவர்களின் ஊடுருவலானது மிகவும் அபாயகரமானது எனவும் இன்னமும் அகதி முகாம்களுள் விடுதலைப் புலிப் போராளிகள் இருப்தாகவும் மேலும் தெரிவித்தார். அவசரகாலச்சட்டத்தை தொடர்ந்து நீடிப்பதற்கு சிறிலங்கா காரணங்களை மாதம் மாதம் தேடவேண்டிய நிலையில் உள்ளதால் இவ்வாறான அச்சங்கள் அரச மட்டத்தில் வெளியாகும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### புதிய வழியைத் திறக்கும் சிறுவர் நீதிமன்றம்

சிறுவர் குற்றச் செயல்கள் சம்பந்தமாக விசாரிப்பதற்காக தனியான நீதிமன்றம் ஒன்றை கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் அமைக்க சிறிலங்கா நீதிமைச்சு தீர்மானித்துள்ளது. சிறுவர்களின் குற்றச் செயல்கள் குறித்து இதுவரை பொதுவான நீதிமன்றத்திலேயே விசாரணைகள் நடத்தப்பட்டன. 16 வயதுக்கு உட்பட்டவர்களின் குற்றச் செயல்கள் இனிமேல் புதிய நீதிமன்றத்தில் விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறார் குற்றச் செயல்கள் தொடர்பாகவும் சிறுவர்களை தடுத்து வைத்தல் சம்பந்தமாகவும் ஆராயவென அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் நீதியசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் ஆலோசனையின் பேரில் இந்தப் புதிய நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளது. எனினும், சிறுவர் போராளிகள் என்று பிடித்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர், யுவதிகளை, சர்வதேச மனித உரிமையாளர்களின் கேள்விகளைத் தடுத்து, சீர்திருத்தப்பள்ளி என்ற சிறைகளில் அடைக்க இந்த புதிய நீதிமன்றம் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### பேருந்து விபத்தில் 12 பேர் காயம்

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு பூநகரி நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்று கடந்த திங்களன்று (22) காலை கிளிநொச்சி குஞ்சுப்பரந்தன் சந்திக்கு அருகில் பாலத்தில் சரிந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 12 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மற்றும் யாழ். மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். பேருந்தில் கூடுதலான பயணிகளை ஏற்றிச்சென்றதே இந்த விபத்து நேரக்காரணம் எனத் சொல்லப்படுகின்றது.

### ஈழத்துக் கலைஞர் பிச்சையப்பா காலமானார்

இலங்கையில் அனைவராலும் பிச்சையப்பா என செல்லமாக அழைக்கப்படும் சிறந்தொரு கலைஞரான சிறீதர் பிச்சையப்பா கடந்த 20ம் திகதி காலமானார். 48 வயதான இவர் கடந்த சில வருடங்களாக சுகவீனமுற்றிருந்தார். எனினும் தனது உடல் நலத்தினை பொருட்படுத்தாது கலைப்பணியை முன்னெடுத்து வந்தார். இலங்கையில் மட்டுமல்லாது நாடு கடந்தும் தனது கலைப்பணியை முன்னெடுத்தார். தனது சிறுவயது முதல், வானொலி முதலாக அனைத்து ஊடகத்திலும் தனது திறமையை வெளிப்படுத்தி வந்தவராவார். சிறந்த நாடக நடிகராக, சிறந்த ஓவியராக மட்டுமல்லாது சிறந்த பாடகனாக என பல்வேறு துறைகளிலும் பிரகாசித் →